26.08.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### விதை உற்பத்தியில் எண்ணெய் வித்து பயிர்களுக்கு முக்கியத்துவம் அளிக்க திட்டம்

நிகழாண்டில் சான்றிதழ் விதை உற்பத்தியில் எண்ணெய் வித்துப் பயிர்களுக்கு முக்கியத்தும் அளிக்க வேளாண் துறை அலுவலர்கள் திட்டமிட்டுள்ளனர்.

அரசு விதைச் சான்றளிப்பு, அங்ககச் சான்றளிப்புத் துறை சார்பில் சான்றிதழ் விதைகள் உற்பத்தி நடைமுறைகள் குறித்து வேளாண்மை உதவி இயக்குநர்கள், உதவி விதை அலுவலர்களுக்கான பயிற்சி நாமக்கல்லில் அண்மையில் நடைபெற்றது.

நாமக்கல் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) த.லோகநாத பிரகாசம் பயிற்சியைத் தொடக்கி வைத்தார்.

வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) எம்.சுப்பையா நிகழாண்டில் செயல்படுத்தப்படவுள்ள விதை பெருக்கத் திட்டங்கள் குறித்து கூறினார்.

நாமக்கல் மாவட்ட விதைச் சான்றிதழ் உதவி இயக்குநர் கு.ஜெகதீசன், தரமான சான்றிதழ் விதைகள் உற்பத்தி செய்திட விதைப் பண்ணை பதிவு, வயல் ஆய்வு, விதை சுத்திகரிப்பு செய்தல், விதை மாதிரிகள் எடுத்தல் போன்ற சான்றிதழ் விதைகள் உற்பத்தி நடைமுறைகள், சான்றிதழ் விதைகள் உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கினார்.

2016-17-ஆம் ஆண்டுக்கு நாமக்கல் மாவட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ள விதைப் பெருக்கத் திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இதன்படி, நாமக்கல் மாவட்டத்தில் நெல் பயிர் 67 ஹெக்டேர், சிறுதானியங்கள் 36 ஹெக்டேர், பயறு வகை பயிர்கள் 280 ஹெக்டேர், பருத்தி 7 ஹெக்டேர் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்கள் 428 ஹெக்டேர் பரப்பில் ஆதாரம், சான்றிதழ் விதைப் பண்ணைகள் அமைக்கப்படவுள்ளன.

மேலும் இவ்விதைப் பண்ணைகள் மூலம் 169மெ. டன் நெல், 36மெ. டன் சிறுதானியங்கள், 200மெ. டன் பயறுவகை பயிர்கள், 3.5 டன் பருத்தி, 620மெ. டன் எண்ணெய் வித்துப் பயிர்கள் விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்கள் மூலம் சான்றிதழ் விதைகள் வழங்கிட செயல் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக வேளாண்மை அலுவலர்கள் எஸ்.கவிதா, பாபு, பி.கவிதா, அன்புச்செல்வி, விதைச் சான்றிதழ் அலுவலர்கள் ராஜ்குமார், ஜெயக்குமார், பிரேமா ஆகியோர் செய்திருந்தனர்.

## இயற்கை வேளாண்மையை ஊக்கப்படுத்த வேண்டும்'



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல நூற்றாண்டுகளாக இயற்கை வேளாண்மையை ஆர்வத்துடன் செய்துவரும் நிலையில், இந்த பாரம்பரிய முறையைப் பின்பற்றும் வகையில் அரசு ஊக்கமளிக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

வேளாண்மையில் பசுமைப் புரட்சி மூலம் உணவுப் பொருள்களின் மகசூல் பலமடங்காக உயர்ந்தன. இதனால் நாட்டில் பசி, பட்டினி போக்கப்பட்டது.

ரசாயன உரம் மற்றும் பூச்சிக் கொல்லிகளில் விவசாயிகள் அதிக நாட்டம் காட்டியதால், விளைநிலத்தின் தன்மை பெரிதும் பாதிக்கப்பட்டு, மக்கள் நோய்களால் பாதிக்கப்பட்டதோடு, சுற்றுச்சூழலும் பாதிக்கப்பட்டது. இத்தகைய நிலையில், தற்போது பொதுமக்களிடம் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வும், அக்கறையும் அதிகரித்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டக்தில் விவசாயிகள் பல தலைமுறைகளாக பாரம்பரிய முறையில் இயற்கை வேளாண்மையைப் பின்பற்றி சாகுபடி செய்து வருகின்றனர். பர்கூர், கிருஷ்ணகிரி, வேப்பனஅள்ளி, தளி, தேன்கனிக்கோட்டை, ராயக்கோட்டை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இயற்கை வேளாண்மையை விவசாயிகள் ஆர்வத்துடன் பின்பற்றி வருவதைக் காண முடிகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 1,80,284 ஹெக்டேர் பரப்பளவில் பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக, தோட்டக்கலைப் பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இருப்பினும் நெல், கேழ்வரகு, துவரை, நிலக்கடலை, கொள்ளு போன்ற பயிர்களும் பெருமளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. மாவட்டத்தில் சராசரியாக நெல் பயிர் 26,200 ஹெக்டேர் பரப்பளவிலும், சிறு தானியப் பயிர்கள் 62,100 ஹெக்டேரிலும், பயறு வகைப் பயிர்கள் 59,300 ஹெக்டேரிலும், நிலக்கடலை 17,200 ஹெக்டேர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்படுகிறது.

பாராம்பரிய முறை:

நிலம், தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு, அவற்றை நீடித்து நிலைக்கும் வகையிலும், மேம்படுத்தும் வகையிலும் செயல்பட வேண்டும் என்பது இயற்கை வேளாண்மையின் கோட்பாடுகளில் ஒன்று. அதன்படி, விவசாயிகள் நெல் நாற்று நடுவதற்கு முன் விளைநிலத்தில் அடியுரமாக வேம்பு, ஆமணக்கு போன்ற மரம், செடி ஆகியவற்றின் இலைகளை மக்கச் செய்கின்றனர். சிலர், ஆடு, மாடு, வாத்துக்கள் ஆகியவற்றை விளைநிலக்கில் மந்தை அடைக்கல் மூலம் மேயவிட்டு, அதன் கழிவுகளை உரமாக பயன்படுத்தும் முறையைக் கடைப்பிடிக்கின்றனர்.

பாரம்பரிய முறையில் சாகுபடி செய்யும் அவதானப்பட்டியைச் சேர்ந்த விவசாயி கோவிந்தராஜ் (45) கூறியது, தற்போதைய நவீன காலத்தில் கால்நடை மேய்ச்சல் தொழில் செய்யும் கிதாரிகள் முற்றிலும் குறைந்துவிட்டதால், விவசாயிகள் தாங்களே கால்நடைகளை வளர்த்து வருகின்றனர். இதன்மூலம் விளைநிலங்களில் மந்தைகளை அடைக்கும் முறையை பின்பற்றி வருகிறோம். இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நோய்த் தாக்குதல் குறைகிறது என்றார்.

வேப்பனஅள்ளி அருகே உள்ள நேரலகிரியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அரசு அலுவலரும், இயற்கை வேளாண் ஆர்வலருமான அஸ்வத் நாராயணன் (78) தெரிவித்தது: தனது அரசுப் பணி ஓய்வுக்குப் பிறகு எனது மாந்தோப்பில் இயற்கை வேளாண் முறையில் மா மரங்களைப் பராமரித்து வருகிறேன். இதனால், தோட்டத்தில் அறுவடை செய்யப்படும் காய்கள், பழங்கள் தரமானதாகவும், பூச்சித் தாக்குதல் இல்லாததாகவும் உள்ளன. இதனால், என் தோட்டத்தில் விளைந்த மாம்பழங்களுக்கு நல்ல கிராக்கி உள்ளது. இயற்கை வேளாண்மை குறித்து சுற்றியுள்ள விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறேன். எனவே, விவசாயிகளிடம் இயற்கை வேளாண்மை தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் விழிப்புணர்வும், ஊக்கமும் அரசு அளிக்க வேண்டும் என்றார்.

கிருஷ்ணகிரி அருகே கூட்டாக வேளாண்மையில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் கூறும்போது, மண் மலட்டுத்தன்மை அடைவதை இயற்கை வேளாண்மை மூலம் தடுக்க முடியும். மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிக கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. அவற்றின் மூலம் கிடைக்கும் சிறுநீரைக் கொண்டு பூச்சிக்கொல்லி தெளிப்பானாகப் பயன்படுத்தும் முறையை ஊக்கப்படுத்த வேண்டும். இதுகுறித்த விழிப்புணர்வு விவசாயிகளிடம் குறைவாக உள்ளது என வேதனைப்பட்டனர்.

பரம்பரை இயற்கை வேளாண்மைத் திட்டம்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பரம்பரை இயற்கை வேளாண்மைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். இதன் மூலம் வேளாண்மை, தோட்டக்கலைப் பயிர்களை இயற்கை முறையில் சாகுபடி செய்ய அரசு ஊக்கம் அளித்து வருகிறது.

நிகழாண்டில் தளி, மத்தூர், ஊத்தங்கரை, கெலமங்கலம் ஆகிய வட்டங்களில் குழுக்கள் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு குழுக்களுக்கும் 3 ஆண்டுகளுக்கு இயற்கை

வேளாண்மை குறித்து பயிற்சியும், நிதியும் அளித்து விவசாயிகளை ஊக்கப்படுத்தி வருகின்றனர். ஒவ்வொரு குழுவுக்கும் ஆண்டுக்கு ரூ.7 லட்சம் நிதியுதவி வழங்கப்படுவதாக சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்கள் தெரிவித்தனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இயற்கை முறை வேளாண்மை தொழில்நுட்பத்தை விவசாயிகள் தங்களது குடும்ப அளவிலேயே பயன்படுத்தி வரும் நிலையில், அந்த தொழில் நுட்பத்தைக் கைவிடாமல் மற்றவர்களும் பயன்படுத்தும் வகையில் அரசு அதிக ஊக்கமும், விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும் என்பதே விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

## தேவாமங்கலத்தில் நீர் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

அரியலூர் மாவட்டம், ஜயங்கொண்டம் அருகேயுள்ள தேவாமங்கலத்தில்,வட்டார வேளாண் மையம்,பிரதான் மந்திரி கிரிஷி சிஞ்சாயி யோஜனா திட்டத்தின் கீழ் நீர் சேகரிப்பு மற்றம் நீர் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

வேளாண் உதவி இயக்குநர் (பொ) காசிநாதன் தலைமை வகித்தார். வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் மீனாட்சி, உதவித் தொழில்நுட்ப மேலாளர் முருகன் ஆகியோர் திட்டச் செயல்பாடுகளை விளக்கினர்.

கிரீடு வேளாண் அறிவியல் மையத் தொழில்நுட்ப வல்லுநர் ராஜ்கலா மானாவாரி,நீர்பிடிப்புப் பகுதிகளில் பின்பற்ற வேண்டிய நீர் சேகரிப்பு முறைகளான பண்ணைக் குட்டை அமைத்தல், மண் அரிப்பைத் தடுக்க வெட்டிவேர் வளர்த்தல், நிலப்போர்வை அமைத்தல் மற்றும் நிலத்தடி நீர் பராமரிப்பு உள்ளிட்டவை குறித்து விளக்கினார்.

பயிர்ச் சாகுபடியில் நீரைச் சிக்கனமாகவும், திறன்படவும் பயன்படுத்தும் முறைகளான சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்பு நீர்ப்பாசனம், மழை தூவாண் அமைக்கும் முறை, சொட்டுநீர் உரப் பாசனம் ஆகியவை குறித்து விளக்கப்பட்டது.

வேளாண் சாகுபடியுடன் பண்ணை வருவாயை உயர்த்தக்கூடிய ஒருங்கிணைந்த பண்ணையம் அமைப்பது குறித்தும் விளக்கப்பட்டது. பயிற்சியில் ஏராளமான விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் கலந்து கொண்டனர்.

## நேரடி நெல் விதைப்பு செய்ய வல்லுநர் பேரவை வேண்டுகோள்

டெல்டா மாவட்டங்களில் நேரடி நெல் விதைப்பு செய்வதற்கு தயாராகுமாறு விவசாயிகளுக்கு தஞ்சாவூர் மாவட்ட மூத்த வேளாண் வல்லுநர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுகுறித்து அப்பேரவையைச் சேர்ந்த வ. பழனியப்பன் தெரிவித்திருப்பது:

காவிரி நீர்பிடிப்புப் பகுதியில் இதுவரை போதிய மழை பெய்யாத காரணத்தாலும், காவிரி நதிநீர் பங்கீடு நடுவர் மன்ற இறுதி தீர்ப்பின்படி கர்நாடக அரசு தமிழகத்துக்கு உரிய தண்ணீரை தர மறுப்பதாலும் மீண்டும் சம்பா சாகுபடி கேள்விக்குறியாகியுள்ளது.

ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தில் 1987 ஆம் ஆண்டு முதல் முறையாக நேரடி நெல் விதைப்பு அறிமுகப்படுத்தப்பட்டதை அனைவரும் அறிந்திருப்பர். இதைத் திருத்துறைபூண்டி விவசாயிகள் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றனர். எனவே, நிகழாண்டில் சம்பாவில் நேரடி நெல் விதைப்பு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இந்த ஆகஸ்ட் மாதம் முழுவதும் (ஆவணி இரண்டாம் வாரம் வரை) சி.ஆர். 1009 போன்ற நீண்டகால ரகங்களைத் தெளிக்கலாம். இம்மாத இறுதியில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. இப்போது தெளித்தால் மழையில் முளைக்கும். தொடர்ந்து பெய்ய இருக்கிற மழை மூலம் ஆற்றில் தண்ணீர் வரும்வரை பயிரை வளர்த்து நல்ல மகசூல் பெறலாம்.

அடுத்த செப்டம்பர் மாதத்தில் (ஆவணி இரண்டாம் வாரம் தொடங்கி புரட்டாசி இரண்டாம் வாரம் வரை) 135 நாள் வயதுடைய மத்திய கால ரகங்களை தெளிக்கலாம். மத்திய கால ரகங்களை உடனே தெளிக்க வேண்டாம். அப்படி தெளித்தால் பிறகு பூக்கும் தருணத்தில் மழையில் சேதமடைய வாய்ப்புள்ளது.

தமிழக அரசு ரூ. 64 கோடிக்கு சம்பா தொகுப்பு திட்டம் அறிவித்துள்ளது. இதைப் பயன்படுத்தி சம்பாவில் நேரடி நெல் விதைப்பு செய்து பயன்பெறலாம்.

**மானியத்தில் கறிக்கோழிப் பண்ணை அமைக்கலாம்**

அரியலூர் மாவட்டத்தில் மானியத்தில் கறிக்கோழிப் பண்ணைகள் அமைக்க விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தகுதியான விவசாயிகள், தனிநபர் தொழில் முனைவோர், சுயஉதவிக் குழுக்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரருக்கு பண்ணை அமைவிடம் கிராம ஊராட்சிப் பகுதி, குடியிருப்பு தவிர்த்த ஊர் வெளிப்புறம், காற்றோட்டமான மேடான மானாவாரிப் பகுதியில் குடும்ப உறுப்பினர் சொந்தமாக பட்டா இடம் வைத்திருக்க வேண்டும்.

குறைந்த முதலீடு மற்றும் குறைந்த காலத்தில் (6-8 வாரம்) வருமானம் பெறலாம். ஆண்டுக்கு குறைந்தது 5 முறை கோழிக் குஞ்சு பெற்று வளர்க்கலாம்.

சுலபமான, யாவராலும் பராமரிக்கக்கூடிய எளிய பண்ணைத் தொழில்நுட்பங்கள். இதன் முதலீடு 5,000 கோழிகளுக்கு கோழிக்கு ஒரு சதுரடி வீதம் 5,000 சதுரடி பண்ணைக் கொட்டகை அமைத்திட சதுரடிக்கு ரூ. 200 வீதம் உத்தேச செலவினம் ரூ. 10 லட்சம்.

உபகரணங்கள் ரூ. 0.75 லட்சம் ஆகக் கூடுதல் மதிப்பீடு ரூ. 10.75 லட்சம். சொந்த முதலீடு, வங்கிக் கடன் மூலம் பணத்தை திரட்டலாம். பண்ணைக் கொட்டகை அமைக்க அரசு மானியம் வழங்குகிறது. பண்ணைக் கொட்டகை அமைத்தவுடன் மாநில அரசு 25 சதவீத (ரூ. 2,68,750) மானியமும் திட்ட முடிவில் நபார்டு வங்கி (மத்திய அரசு) 25 சதவீத (ரூ. 2,68,750) மானியமும் ஆகக் கூடுதலாக 50 சதவீதம் (ரூ. 5,37,500) மானியம் வழங்கப்படுகிறது.

மேலும் பண்ணை ஒருங்கிணைப்பாளர், கோழிக் குஞ்சு, தீவனம் மற்றும் மருந்துகள் வழங்கி கோழிகளையும் தாங்களே திரும்பப் பெற்று வளர்ப்புத் தொகையை வழங்குவார். விருப்பமுள்ளோர் 23.8.2016 முதல் 1.9.2016 முடிய விண்ணப்பிக்கலாம்.

இதற்கான பயனாளிகள் வங்கி மேலாளர் மற்றும் பண்ணை ஒருங்கிணைப்பாளரால் தேர்வு செய்யப்பட்டு ஆட்சியரால் அங்கீகரிக்கப்படுவர். பயனாளிகளில் 33 சதவீத ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு முன்னுரிமை. மேலும் விவரங்களுக்கு அருகிலுள்ள கால்நடை உதவி மருத்துவர்களை அணுகவும்.

## வாடிப்பட்டி பகுதியில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க மானியம்

வாடிப்பட்டி பகுதியில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது.

வாடிப்பட்டி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் (பொ) மு.மலர்விழி திங்கள்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை: வாடிப்பட்டி வட்டாரத்தில் சொட்டுநீர்பாசனம் அமைக்க சிறுகுறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமும் வழங்கப்படுகிறது.

தோட்டக் கலைப் பயிர்களான பழமரங்கள், காய்கறிப்பயிர்கள், மலர்கள் மற்றும் தென்னை பயிர்களுக்கும் சொட்டுநீர் பாசனம் அமைக்கலாம். விவசாயிகள் மானியம் பெற கணினி சிட்டா, அடங்கல் நிலவரைபடம், குடும்ப அட்டை நகல், விண்ணப்பதாரரின் புகைப்படம் ஆகிய ஆவணங்களுடன் ஊராட்சி ஒன்றிய வளாகத்தில் செயல்படும் தோட்டக்கலை அலுவலகம் உதவி தோட்டக்கலை அலுவலகத்தில் உரிய ஆவணங்களை கொண்டு வந்து பதிவு செய்து கொள்ளலாம் என்று கூறியுள்ளார்.

## மதுரையில் இன்று வேளாண் கண்காட்சி தொடக்கம்

யுனைடெட் அக்ரிடெக் -2016 எனும் வேளாண் கண்காட்சி மதுரை தமுக்கம் மைதானத்தில் வியாழக்கிழமை தொடங்கி ஆகஸ்ட் 28 ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

யுனைடெட் டிரேட் ஃபேர் என்ற நிறுவனம் சார்பில், இக்கண்காட்சி நடத்தப்படுகிறது. கண்காட்சியில் 200-க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்படுகின்றன. பயிர் நடவு முதல் அறுவடை வரை பயன்படுத்தப்படும் வேளாண் இயந்திரங்கள், பயிர்களை நோய்களில் இருந்து காப்பாற்றும் மருந்து

தயாரிப்பு நிறுவனங்கள், அதிக மகசூல் வழிமுறைகள், கால்நடை வளர்ப்பு தொழில்நுட்பங்கள், வேளாண்சார் தொழில்கள், பயிர் காப்பீடு உள்ளிட்ட அம்சங்களில் அரங்குகள் அமைக்கப்படுகின்றன.

மேலும் விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும். குறிப்பாக நீர்மேலாண்மை, களர் நிலங்களில் வளரும் பயிர்கள், அதில் அதிக லாபம் அடையும் வழிமுறைகள் ஆகியவற்றை அறிந்து கொள்ள கண்காட்சியில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. மதுரை வேளாண் கல்லூரி பேராசிரியர்கள் பங்கேற்கும் சிறப்பு கருத்தரங்குகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## தேனியில் நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிவிப்பு: மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாசலம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு, தங்களது கோரிக்கைகள் குறித்து மனு அளித்து தீர்வு காணலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேளாண் துறையில் மானிய திட்டங்களுக்கு பயனாளிகள் தேர்வு: வேளாண் உதவி இயக்குநர் தகவல்

தாராபுரம் வட்டாரத்தில் வேளாண் துறை சார்பில் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் பெற பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு வருவதாக வேளாண்மை துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வேளாண் உதவி இயக்குநர் எஸ்.எம்.ஞானசேகரன் கூறியதாவது:

தாராபுரம் வட்டாரத்தில் நடப்பு நிதி ஆண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சம்பா பருவத்தில் விநியோகம் செய்யப்படும் நெல் விதைகளுக்கு

ரூ.10 மானியம் என்ற அளவில் விநியோகம் செய்ய 17 மெட்ரிக் டன் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. நெல் இயந்திரத்தின் மூலம் நடவு செய்வதற்கு ஹெக்டருக்கு ரூ. 5,000 மானியத்தில் 400 ஹெக்டர் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

வரப்பில் பயிர் வகை சாகுபடி செய்ய ஹெக்டருக்கு ரூ. 150 என்ற அளவில் 295 ஹெக்டரும், பயிர் வகை விதைகள் உற்பத்திக்கு கிலோ ரூ. 25 என்ற அளவில் 4 மெட்ரிக் டன்னும், பைப்லைன் விநியோகத்துக்கு ரூ.15 ஆயிரம் எண் மானியத்தில் 7 எண்களும், உயிர் உரங்கள் விநியோகம் செய்ய ஹெக்டருக்கு ரூ.150 என்ற அளவில் 50 ஹெக்டரும், கரும்பில் நீடித்த நிலையான கரும்பு சாகுபடிக்கு ஹெக்டருக்கு ரூ.8,000 என்ற அளவில் 50 ஹெக்டருக்கும் கரும்பு பயிரின் இடையில் கரும்புத் தோகை முடக்கு அமைக்க ஹெக்டருக்கு ரூ.2,500 மானியம் என்ற அளவில் 40 ஹெக்டருக்கும், மண்வளத்தை பெருக்க பசுந்தாள் உரவிதைகள் விதைப்பு மேற்கொண்டமைக்கு ஹெக்டருக்கு ரூ.1,500 என்ற அளவில் 100 ஹெக்டேருக்கு இலக்கு பெறப்பட்டுள்ளது.

தேசிய உணவு பாதுகாப்பு திட்டஹ்தில் 15 ஆண்டுகளுக்கு உள்பட்ட பயறு வகை ரகங்களும் கிலோ ரூ. 25 என்ற அளவில் 2.3 மெட்ரிக் டன்னும், 10 ஆண்டுகளுக்கு உட்பட்ட பயறு வகை ரகங்களுக்கு கிலோ ரூ.25 என்ற அளவில் ஒரு மெட்ரிக் டன்னும், மக்காச்சோள பயிருக்குப்பின் உளுந்து சாகுபடி செய்யப்படும் செயல்விளக்க திடலுக்கு ஹெக்டருக்கு ரூ.10,000 என்ற அளவில் 100 ஹெக்டேரும், விதை தெளிப்பான் விநியோகம் செய்ய ரூ.3,000 என்ற அளவிலும் ரொட்டாவெட்டர் கருவிக்கு ரூ.35,000 என்ற அளவிலும், டிராக்டர், சிறு, குறு ஆதிதிராவிடர் மற்றும் பெண் விவசாயிகளுக்கு ரூ. 1 லட்சத்து 25 ஆயிரம் மானியமும், இதர விவசாயிகளுக்கு ரூ.1 லட்சம் மானியமும் வழங்க இலக்கு பெறப்பட்டுள்ளது.

விதை கிராம திட்டத்தில் நெல் விதை விநியோகம் செய்ய 5 மெட்ரிக் டன்னும், சிறு தானியம் விநியோகம் செய்ய 200 கிலோவும், பயறு வகை விநியோகம் செய்ய 600 கிலோவும், எண்ணெய் வித்துக்கு 4 மெட்ரிக் டன்னுக்கு 1 லட்சம் என்ற அளவில் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

இதுதவிர மேலும் பல்வேறு மானிய திட்டத்துக்கு பயனாளிகள் தேர்வு நடைபெற்று வருகிறது.

எனவே, பயனாளிகள் உதவி வேளாண்மை அலுவலர்கள் எல்.ரவிக்குமார் 9003587754, பி.கருப்பையா 9363242535, பாலுசாமி 9994778487,

தேசிங்குராஜன் 8883728191 ஆகியோரின் செல்லிடப்பேசி எண்ணுக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## அவிநாசியில் ரூ.5.45 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

அவிநாசியில் நடைபெற்ற பருத்தி ஏலத்தில் ரூ. 5 லட்சத்து 45 ஆயிரத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வாரந்தோறும் புதன்கிழமை பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் வரத்து குறைந்து 296 மூட்டைகள் மட்டுமே வந்திருந்தன. இதில், ஆர்.சி.எச் ரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 5,500 முதல் ரூ. 6,020 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 5 லட்சத்து 45 ஆயிரத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது. டி.சி.எச், மட்ட ரகப் பருத்தி வரத்து இல்லை.

இந்த ஏலத்தில், பென்னாகரம், கிணத்துக்கடவு, கோபி, நம்பியூர், அன்னூர், திருப்பூர், பல்லடம், சேவூர், குன்னத்தூர், அவிநாசி, புளியம்பட்டி, மேட்டூர், அன்னூர் ஆகிய பகுதிகளிலிருந்து 56 பருத்தி விவசாயிகளும், கோவை, ஈரோடு பகுதியிலிருந்து 4 பருத்தி வியாபாரிகளும் ஏலத்தில் கலந்து கொண்டனர்.

## மீன் வளர்ப்புக் குளம் அமைத்தால் ரூ. 2.10 லட்சம் மானியம்

மீன் வளர்ப்புக் குளம் அமைத்தால் ரூ. 2.10 லட்சம் மானியம் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்தி:

2016-17 ஆம் ஆண்டில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஒரே ஹெக்டேரில் ரூ. 5 லட்சம் செலவில் சொந்த நிலத்தில் மீன் குளம் அமைப்பவர்களுக்கு ரூ. 2 லட்சம் மற்றும் மீன் குஞ்சுகள் வாங்க ரூ. 10,000 என மொத்தம் ரூ. 2.10 லட்சம் பின் நிலை மானியமாக வழங்கப்படவுள்ளது. மீன் வளர்ப்புக் குளங்கள் அமைக்கும் இடம் சொந்த இடமாகவோ அல்லது 10 ஆண்டுகள் குத்தகை இடமாகவோ இருக்க வேண்டும். கூடுதல் விண்ணப்பங்கள் வந்தால் தகுதி அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள்.

மீன் வளர்ப்புக் குளங்கள் அமைக்க விரும்புவோர் மீன் வள உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம்), எண்: 4, எஸ்.வி. காம்ப்ளக்ஸ் 2-ஆம் தளம், வீரப்பம்பாளையம் பிரிவு, பெருந்துறை சாலை, திண்டல்-638012 (தொலைத்தொடர்பு எண்: 0424-2271912) என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தருமபுரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் ஆகஸ்ட் 26-ஆம் தேதி நடைபெறுகிறது.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: தருமபுரி மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை (ஆக.26) காலை 11 மணியளவில், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெறுகிறது. இக் கூட்டத்தில், வேளாண், தோட்டக்கலைத் துறை உள்ளிட்ட அனைத்துத் துறை அலுவலர்கள் பங்கேற்கின்றனர். எனவே, கூட்டத்தில், மாவட்ட விவசாயிகள் கலந்து கொண்டு, விவசாயம் தொடர்பான தங்களது குறைகளையும், கருத்துகளையும் எடுத்துக்கூறி பயனடையும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என்றார்.

## நாமகிரிப்பேட்டையில் 100 சதவீத மானியத்தில் சொட்டுநீர்ப் பாசனம்

நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் சொட்டுநீர்ப் பாசனக் கருவிகள் வழங்கப்படுவதாக வட்டார தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் மா.புவனேஸ்வரி தெரிவித்தார்.

2016-2017-ஆம் ஆண்டு பிரதான் மந்திரி கிரிஷி சின்சாயி யோஜனா திட்டத்தின் கீழ் சொட்டுநீர்ப் பாசன அமைப்பு செயல்படுத்தப்பட உள்ளது. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை மூலம் செயல்படுத்தப்பட உள்ள இத்திட்டத்தில், தோட்டக்கலைப் பயிர்களுக்கு தோட்டக்கலைத் துறை மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, தகுதியான விண்ணப்பதாரர்கள் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் 2 ஹெக்டேர் வரைக்கும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் 5 ஹெக்டேர் வரைக்கும் சொட்டுநீர்ப் பாசனம் அமைத்துத் தரப்படும்.

சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க உள்ள பொது விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகள் தேவையான ஆவணங்களோடு தங்கள் பகுதியைச் சேர்ந்த உதவி தோட்டக்கலை அலுவலரையோ அல்லது தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தையோ தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம். வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட சிறுகுறு விவசாயி சான்று, சிட்டா அசல்-நகல், கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சாகுபடி செய்யப்பட்ட பயிர், பரப்பு, கிணறு விபரம், மின்மோட்டாரின் குதிரைத் திறன், மின் இணைப்பு எண் போன்ற விவரங்களடங்கிய அடங்கல். சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கவுள்ள நிலத்தின் வரைபடம், விவசாயியின் குடும்ப அட்டை நகல். விவசாயி குத்தகைதாரராக இருந்தால் 10 ஆண்டுக்கான குத்தகை ஒப்பந்தப் பத்திரம் சார்-பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். நிலத்துக்குச் சொந்தமானவர் இறந்து, அவருடைய வாரிசுகள் அனுபவத்தில் நிலமிருந்தால் கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து நிலத்துக்கான அனுபவச் சான்று பெற வேண்டும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தீவனப் பயிர் வளர்க்க மானியம்: விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்**

தீவனப் பயிர் வளர்ப்புக் கிட்டக்கில் மானியம் பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து நாமக்கல் மாவட்ட ஆட்சியர் மு.ஆசியா மரியம் வெளியிட்ட செய்தி: தமிழக அரசு பால் உற்பத்தியைப் பெருக்கவும், உற்பத்தி செலவைக் குறைக்கும் வகையிலும், மானியத்துடன் கூடிய மாநில தீவன உற்பத்தி திட்டத்தை செயல்படுத்த உள்ளது.

இத் திட்டத்தில், நீர்ப்பாசன வசதி கொண்ட விவசாயிகளுக்கு, வீரிய கம்பு நேப்பியர், 0.25 ஏக்கருக்கு (4,000 ஸ்லிப்ஸ்) ரூ.2,000 செலவுத்தொகை வழங்கப்படும். இறவை தீவனப் பயிர் உற்த்தி செய்ய 500 ஏக்கர் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பாசன வசதி இல்லாத விவசாயிகளுக்கு, மானாவாரி தீவன உற்பத்திக்காக 0.25 ஏக்கருக்கு 3 கிலோ சோளம் மற்றும் ஒரு கிலோ தட்டைப் பயிறு இலவசமாக வழங்கப்படும். நிகழாண்டு 3,000 ஏக்கரில் மானாவாரி தீவனம் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னோடி விவசாயிகள் மூலம் தரம் நிர்ணயம் செய்யப்பட்ட விதைகள் உற்பத்தி செய்ய 30 ஏக்கர் தீவன சோளமும், 20 ஏக்கர் தட்டைப் பயிர் பயிரிட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மின்சாரத்தால் இயங்கும் புல்வெட்டும் கருவி 60 சதவீதம் மானியத்தில், 70 விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது. பால் உற்பத்தி செலவைக் குறைக்கும் நோக்கில், குறைந்த விலையில் நிறைந்த புரதம் கொண்ட அசோலா பாசி உற்பத்தி செய்ய 200 பேருக்கு, அசோலா தொட்டி மற்றும் இடுபொருள்கள் இலவசமாக வழங்கப்படும். பசுந்தீவனம் மற்றும் கரும்புத் தோகையைப் பதப்படுத்தி தீவனப் பற்றாக்குறை உள்ள காலத்தில் பயன்படுத்தும் வகையில், ஊறுகாய் புல் தயாரிக்க 700 பேருக்கு, இலவசமாக தலா 4 சைலேஜ் பைகள், இடுபொருள்கள் வழங்கப்படும். இரண்டு கறவை மாடுகள் உள்ள சிறு, குறு விவசாயிகள், விலையில்லா கறவை பசு திட்டப் பயனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 30 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒருவர் ஒரு திட்டத்தில் மட்டுமே பயன் பெற முடியும். கடந்த ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற்றவர்கள் மீண்டும் பயன்பெற இயலாது. பயனடைய விரும்பும் விவசாயிகள், அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தில் விண்ணப்பம் அளித்து, பெயரை முன்பதிவு செய்துகொள்ள வேண்டும். பதிவு முன்னுரிமை அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர்.

## செப். 1 முதல் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

தஞ்சாவூர் மாவட்டத்தில் செப். 1-ம் தேதி முதல் 21 நாள்களுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடைபெறவுள்ளது என்றார் ஆட்சியர் ஆ. அண்ணாதுரை.

இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரகத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் அண்மையில் நடைபெற்ற திட்டப் பங்களிப்பு துறைகளின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அவர் பேசியது: மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பு திட்டத்தின் கீழ், 11-வது சுற்று தடுப்பூசி போடும் பணி செப். 1-ம் தேதி முதல் 21-ம் தேதி வரை

நடைபெறவுள்ளது. இதற்காக மாவட்டத்தில் 76 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள், 3.86 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசிப்போட உள்ளன.

இத்திட்டத்தில் அனைத்து கால்நடைகளும் பயன்பெறும் வகையில் ஊராட்சித் தலைவர்கள் தங்களது ஊராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்ய வேண்டும் என்றார் ஆட்சியர். கூட்டத்தில், கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் ராஜசேகரன், ஆவின் மேலாளர் காமராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## உணவு உற்பத்தியில் தமிழகம் முன்னோடி மாநிலம்: வேளாண்மை துறை அமைச்சர் பேச்சு

உணவு உற்பத்தியில் தமிழகம் முன்னோடி மாநிலமாக உள்ளது என்றார் வேளாண்மைத் துறை அமைச்சர் இரா. துரைக்கண்ணு.

தஞ்சாவூரில் வியாழக்கிழமை நடைபெற்ற தமிழ்நாடு விவசாய இடுபொருள் விற்பனையாளர்கள் சங்க மாநில மாநாட்டில் அவர் மேலும் பேசியது: "இருமடங்கு உற்பத்தி; மூன்று மடங்கு லாபம்' என்ற அடிப்படையில் தமிழக முதல்வர் வேளாண்மைத் துறையில் பொற்காலத்தை ஏற்படுத்தி வருகிறார்.

உணவு உற்பத்தியில் தமிழகம் முன்னோடி மாநிலமாக உள்ளது. வேளாண்மைத் துறைக்குத் தமிழக முதல்வர் அதிக நிதி ஒதுக்கீடு செய்து வருவதே இதற்குக் காரணம்.

உணவு உற்பத்தி திறனை அதிகப்படுத்த வேண்டுமானால், விவசாய இடுபொருள் விற்பனையாளர்களின் ஒத்துழைப்புத் தேவை. எனவே, தமிழக முதல்வருக்கு விவசாய இடுபொருள் விற்பனையாளர்கள் துணையாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

சம்பா சாகுபடி தொகுப்புத் திட்டத்தில் இடுபொருள்களுக்காக ரூ. 64.30 கோடியை தமிழக முதல்வர் ஒதுக்கீடு செய்துள்ளார். இதேபோல, விவசாயிகளின் கூட்டுறவு கடனைத் தள்ளுபடி செய்தது மட்டுமல்லாமல், புதிய கடன் வழங்குவதற்காக நிதி ஒதுக்கீடும் செய்துள்ளார் முதல்வர் என்றார் துரைக்கண்ணு. மாநிலங்களவை உறுப்பினர் ஆர். வைத்திலிங்கம், மக்களவை உறுப்பினர் கு. பரசுராமன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கே. ராமசாமி, சதய விழாக் குழுத் தலைவர் எம். ரெங்கசாமி, மேயர் சாவித்திரி கோபால், சங்கத்தின்

மாநிலத் தலைவர் பி. விஜய் நடராஜ், மாநாட்டுக் குழுத் தலைவர் எம். மோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### திருநெல்வேலிக்கு ஆயிரம் டன் பொது ரக நெல்

நீடாமங்கலத்திலிருந்து ஆயிரம் டன் பொது ரக நெல் அரவைக்காக திருநெல்வேலிக்கு புதன்கிழமை சரக்கு ரயிலில் அனுப்பி வைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையங்கள் ஆகியவற்றிலிருந்து ஆயிரம் டன் எடையுள்ள பொது ரக நெல் 75 லாரிகளில் நீடாமங்கலம் ரயில் நிலையத்திற்கு புதன்கிழமை கொண்டுவரப்பட்டன.

நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள் முன்னிலையில் நெல் மூட்டைகள் அரவைக்காக திருநெல்வேலிக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

# தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கோமாரி நோய் தடுப்பூசி பணி ஒருங்கிணைப்பு குழு கூட்டம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், கோமாரி நோய் தடுப்பூசி பணி குறித்த ஒருங்கிணைந்த குழு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு கலெக்டர் கதிரவன் தலைமை வகித்து பேசியதாவது: மாவட்டத்தில் கோமாரி நோய் வராமல் தடுக்க, வரும் செப்டம்பர், 1ம் தேதி முதல், 21ம் தேதி வரை தொடர்ச்சியாக கோமாரி நோய் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட உள்ளது. இந்த முகாம்களில் கால்நடை வளர்ப்போர் தங்களது கால்நடைகளை கொண்டு வந்து, கோமாரி நோய் தடுப்பூசி போட்டு பயன் பெற, கால்நடை துறை அலுவலர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், நான்கு மாத கன்று முதல் அனைத்து பசு, எருமை இனங்களையும் தடுப்பூசி போடும் மையத்திற்கு கொண்டு வந்து தடுப்பூசி போட்டுக் கொள்ள ஏதுவாக, அனைத்து முன்னேற்பாடுகளையும் மேற்கொள்ள, பஞ்., தலைவர்கள், செயலாளர்களுக்கு, உதவி இயக்குநர் (பஞ்.,கள்), அறிவுரை வழங்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். கூட்டத்தில், டி.ஆர்.ஓ., கிறிஸ்டி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் மந்திராசலம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் உட்பட பலர் பங்கேற்றனர்.

### முந்திரி வரத்து குறைவு கிலோ ரூ.120 அதிகரிப்பு

திண்டுக்கல், திண்டுக்கல்லில் வரத்து குறைவால் முந்திரிப்பருப்பு கிலோவுக்கு ரூ.120 விலை அதிகரித்துள்ளது.திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு கொல்லம், பண்ருட்டியில் இருந்து தினமும் 600 கிலோ வரை முந்திரிப்பருப்பு விற்பனைக்கு வரும். சாதாரண நாட்களை விட விசேஷ நாட்களில் முந்திரிப் பருப்பிற்கு மவுசு அதிகம் இருக்கும். அந்த நாட்களில் முந்திரியின் விலை உச்சத்தில் இருக்கும்.ஆனால், கடந்த ஒரு மாதமாகவே கொல்லம், பண்ருட்டியில்

முந்திரி சாகுபடி குறைந்ததால், வரத்தும் குறைந்தது. குறைந்தளவு சாகுபடியாகும் முந்திரிப் பருப்பும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் விலை அதிகரித்து வருகிறது. இரண்டு வாரங்களுக்கு முன் முந்திரிப்பருப்பு கிலோ ரூ.600 க்கு விற்பனையானது. வரத்து குறைவால் நேற்று ஒரு கிலோ ரூ.120 அதிகரித்து, ரூ.720 க்கு விற்றது. வியாபாரி ஒருவர் கூறுகையில்,"வெளி மாநிலங்களில் முந்திரிப்பருப்பு போதுமான சாகுபடி இல்லை. வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவதால் விலை அதிகரித்துள்ளது. மேலும், விலை அதிகரிக்கலாம்",என்றார்.

## மூங்கில்துறைபட்டில் பூச்சி தாக்குதல் குறித்த ஆய்வு

சங்கராபுரம்: மூங்கில்துறைபட்டு கூட்டுறவு சர்க்கரை ஆலை பகுதியில், சாகுபடி செய்யப்பட்டுள்ள கரும்பு பயிரில் இடைகணுப்புழு மற்றும் நுணி குருத்துபுழு தாக்குதல் கண்டறியபட்டது.

கரும்பு ஆலையின் மேலாண்மை இயக்குனர் ரத்தினசாமி ஆலோசனையின்படி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகம், கடலூார் கரும்பு ஆராய்ச்சி நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர்கள் வரவழைக்கபட்டனர். பேராசிரியர்கள் ஜெயசந்திரன், துரைசாமி அடங்கிய குழுவினர் வாணாபுரம், மூங்கில்துறைபட்டு, ஈருடையாம்பட்டு, சங்கராபுரம், பாண்டலம், முக்கனுர், சிவபுரம் ஆகிய பகுதிகளில் நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்ட வயல்களை நேரில் பார்வையிட்டனர்.

ஆய்வின்போது கரும்பு அபிவிருத்தி அலுவலர் முனியசாமி, கரும்பு அலுவலர்கள் முருகேசன், சிவராமன், ராஜேஷ், நாராயணன் மற்றும் கரும்பு உதவியாளர்கள் உடனிருந்தனர்.

## நஞ்சை தாழையூர் தடுப்பணையில் இருந்து தாதம்பாளையம் ஏரிக்கு வாய்க்கால் திட்டம்

கரூர்: அமராவதி ஆற்றில், நஞ்சை தாழையூர் தடுப்பணையில் இருந்து, கரூர் மாவட்டம் தாதம்பாளையம் ஏரிக்கு வாய்க்கால் அமைக்கும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பருவமழை காலங்களில், அமராவதி ஆற்றில், 10 டி.எம்.சி., தண்ணீர் வரை வீணாகிறது. தண்ணீரை சேமிக்கும் வகையில், திருப்பூர் மாவட்டம் நஞ்சை தாழையூர் தடுப்பணையில் இருந்து கரூர் மாவட்டம் தாதம்பாளையம் ஏரிக்கு, வாய்க்கால் அமைக்கும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். திட்டத்துக்காக கடந்த, 20 ஆண்டுகளாக போராடும் விவசாயி ராமசாமி கூறியதாவது: பருவமழை காலங்களில், அமராவதி ஆற்றில் ஏராளமான தண்ணீர் வீணாகிறது. தண்ணீரை சேமிக்க, கடந்த 2001-02ம் ஆண்டில், 12.10 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. அதாவது, நஞ்சை தாழையூர் தடுப்பணையில் இருந்து நாச்சிமாரியம்மன், சின்னதிருமங்கலம், வெங்கடாபுரம், அகிலாண்டபுரம், ஊத்துபட்டி, தொட்டம்பட்டி, சின்னமுத்தாம்பாளையம், பெரிய தாதம்பாளையம் வரை, 35 கி.மீ., தூரம் வாய்க்கால் அமைப்பது. இதில், 20 கி.மீ., தூரம் பட்டா நிலம் வருவதால், திட்டத்துக்கு விவசாயிகள் சிலர் எதிர்ப்பு தெரிவித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததால், திட்டம் கிடப்பில் உள்ளது. திட்டத்தை செயல்படுத்தினால், 420 ஏக்கர் பரப்பளவு உள்ள தாதம்பாளையம் ஏரி, ஐந்துக்கும் மேற்பட்ட குளங்கள் நிரம்பும். ஒரு முறை நிரம்பினால் இரண்டுஆண்டுகளுக்கு தண்ணீர் பிரச்னை வராது. சுத்தமான தண்ணீர் இல்லாததால், கரூர் மாவட்டத்தில், பத்து சதவீதம் பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக டாக்டர்கள் தெரிவிக்கின்றனர். திட்டத்தை நிறைவேற்றினால் சுத்தமான தண்ணீர் கிடைக்கும். இந்த திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை என்றாலும், நஞ்சை காளக்குறிச்சி, காசிபாளையம், தொட்டிவாடி வழியாக தாதம்பாளையம் ஏரிக்கு தண்ணீர் நிரப்பும் வாய்க்கால் அமைக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி

கரூர்: கரூர் மாவட்டத்தில், ஒரு லட்சத்து 90 ஆயிரம் கால்நடைகளுக்கு, கோமாரி தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கரூர் கலெக்டர் அலுவலகத்தில், கோமாரிநோய் தடுப்பு தொடர்பான ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடந்தது. கலெக்டர் கோவிந்தராஜ் பேசியதாவது: கோமாரி நோய் தடுப்பூசி முகாம் ஆண்டிற்கு, இருமுறை மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் நடத்தப்படுகிறது.

தடுப்பூசி போடுவதால், பசு, எருமைகளுக்கு நோய்தாக்கம் ஏற்படுவதில்லை. மாவட்டத்தில், ஒரு லட்சத்து 90 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. செப்.,1 முதல் தடுப்பூசி போடும் பணி துவங்கப்பட்டு வரும், 21ம் தேதி நிறைவடைகிறது.இவ்வாறு அவர் பேசினார். கூட்டத்தில், கால்நடை பராமாரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் பழனிவேல், மாவட்ட வன அலுவலர் அல்லிராஜன், புதுவாழ்வு திட்ட மாவட்ட மேலாளர் ஜெய்கணேஷ், நகராட்சி நகர்நல அலுவலர் ஹேம்சந்த்காந்தி உட்பட பலர் பங்கேற்றனர்.

## உழவு செய்த நிலங்களில் ஆட்டுக்கிடை அமைப்பு: விவசாயிகள் ஆர்வம்

கீழக்கரை, திருப்புல்லாணி ஒன்றிய பகுதிகளில் ஆட்டுக்கிடைகளுக்கு கிராக்கி அதிகரித்துள்ளது.

திருப்புல்லாணி சுற்றுவட்டாரப் பகுதிகளில் சம்பா நெல் சாகுபடிக்காக விவசாயிகள் நிலங்களை உழுது தயார்படுத்தி வருகின்றனர். பருவமழை பெய்யத் துவங்கியதும் சாகுபடி பணிகளை துவக்க உள்ளனர். நெல் சாகுபடிக்கு இயற்கை உரம் அவசியம் என்பதால் மாட்டு சாணம், ஆட்டு சாணம், தழை போன்றவற்றை இப்போதே சேகரித்து வருகின்றனர். இவற்றில் ஆட்டுக்கிடைகளுக்கு கிராக்கி அதிகரித்துள்ளது. காஞ்சிரங்குடி, களரி, கொம்பூதி, சுமைதாங்கி உள்ளிட்ட பகுதிகளில் விவசாய நிலங்களில் ஆட்டுக்கிடை அமைக்க அதன் உரிமையாளர்கள் நாள் ஒன்றுக்கு ரூ.200 வீதம் கூலி கேட்கின்றனர். வேறு வழியின்றி அவர்கள் கேட்கும் தொகையை கொடுத்து விளைநிலங்களில் 50க்கு 30 அடி என்ற அளவில் வலையால் வேலி அமைத்து அதில் 50 ஆடுகள் வீதம் ஒருவாரம் கிடை அமைக்கின்றனர்.

திருவாடானையைச் சேர்ந்த கிடை உரிமையாளர் ராமர் கூறுகையில்,“ ஆடுகளின் சிறுநீர், கழிவுகள் பயிர்களுக்கு நல்ல இயற்கை உரம் என்பதால், அறுவடை முடிந்தவுடன் நிலங்களில் கிடை அமைக்க நில உரிமையாளர்கள் எங்களை அணுகுகின்றனர். அவர்களிடம் முன்பணம் பெற்றுக்கொண்டு கிடை அமைக்கிறோம். பகல் முழுவதும் ஆடுகளை மேய்ச்சலுக்கு விடுவோம். இரவு வயல்வெளிகளில் ஆட்டுக்கிடை அருகில் தங்குவோம்,” என்றார்.

## நேரடி நெல் விதைப்பிற்கு கருவியை பயன்படுத்தலாம்: வேளாண்மை இணை இயக்குனர் தகவல்

ராமநாதபுரம், நேரடி நெல் விதைப்பிற்கு விவசாயிகள் நெல் விதை விதைக்கும் கருவியை பயன்படுத்தலாம், என வேளாண்மை இணை இயக்குனர் அரிவாசன் தெரிவித்தார்.

தேசிய உணவு பாதுகாப்பு இயக்க திட்டத்தின் கீழ், ராமநாதபுரம் அருகே காரேந்தல் கிராமத்தில் விவசாயிகளுக்கு பயிர் திட்ட அடிப்படையிலான பயிற்சி அளிக்கப்பட்டது. மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் அரிவாசன் தலைமை வகித்தார்.

அவர் பேசுகையில், 'விவசாயிகள் நேரடி நெல் விதைப்பிற்கு நெல் விதை விதைக்கும் கருவியை பயன்படுத்த வேண்டும்,' என்றார். கலெக்டரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) வெள்ளைச்சாமி முன்னிலை வகித்தார். அவர் பேசுகையில், 'நெல் வரப்பில் பயறு வகைகள், வரப்பு ஓரங்களில் சிறு தானியங்களை சாகுபடி செய்து அதிக வருமானம் பெறலாம்,' என்றார். நெல் சாகுபடியில் அதிக வருமானம் பெறுவதற்கு உயர் விளைச்சல் ரகங்களான என்.எல்.ஆர்.34449, கோ.ஆர் 50, 51 விதை நேர்த்தி முறைகளை பின்பற்றுமாறு ஓய்வு பெற்ற வேளாண்மை உதவி இயக்குனர் மணவாளன் கூறினார். வட்டார வேளாண்மை அலுவலர் செல்வம், நல்விதைத் தேர்வு மற்றும் உயிர் உரங்களின் பயன் குறித்து விளக்கினார்.

ஊட்டமேற்றிய தொழு உரமிடுவதால் நெற்பயிருக்கு போதிய அளவு மணிச்சத்து கிடைக்கிறது. சூடோமோனாஸ் கிலோவிற்கு 10 கிராம் கலந்து நெல் விதைகளை விதைப்பதன் மூலம் வேரழுகல், குலைநோய், இலைப்புள்ளி நோய்களை தடுக்கலாம், என ராமநாதபுரம் வட்டார வேளாண்மை அலுவலர் ராஜலட்சுமி தெரிவித்தார்.

நெல்விதைத்தேர்வு, உயிர் உர விதை நேர்த்தி செயல்விளக்கங்களை உதவி வேளாண்மை அலுவலர்கள் ஜெயக்கொடி, மோகனவள்ளி செய்து காட்டினர். பயிற்சியில் முன்னோடி விவசாயிகள் காசி, காளீஸ்வரன், மாணிக்கம் உள்பட பலர் பங்கேற்றனர்.

## ஆன்லைனில் மஞ்சள் விலை குறைந்தது: மஞ்சள் மார்க்கெட்டிலும் சரியும் அபாயம்

நாமகிரிப்பேட்டை: ஆன்லைனில் மஞ்சள் விலை குறைந்து வருவதால், மார்கெட்டிலும் விலை சரிய வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

தமிழகத்தில், ஈரோட்டுக்கு அடுத்து, நாமகிரிப்பேட்டையில்தான் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளன. இங்கு வாரம்தோறும், செவ்வாய்கிழமை மஞ்சள் விற்பனை நடக்கிறது. கூட்டுறவு விற்பனை சங்கம் உட்பட, 17 தனியார் மண்டிகள் இயங்கி வருகின்றன. நாமகிரிப்பேட்டைக்கு, கடந்த வாரத்தை விட, இந்த வாரம், மஞ்சள் வரத்து பாதியாக குறைந்தது. விரலி ரகம், அதிகபட்சம், 10 ஆயிரம் ரூபாய்க்கு விற்றாலும், 100 கிலோ மூட்டை, 8,000 ரூபாயில் இருந்து, 9,000 ரூபாய் வரை, மட்டுமே விற்பனையானது.கடந்த ஆண்டு ஆந்திரா, மகாராஷ்டிரா மாநிலங்களில், வறட்சி மற்றும் புயல் காரணமாக மஞ்சள் சாகுபடி குறைந்துவிட்டதாக தகவல்கள் வந்தன. எனவே, இந்தாண்டு தமிழக மஞ்சளுக்கு நல்ல விலை கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. வியாபாரிகள், விவசாயிகள் மஞ்சளை இருப்பு வைக்கத் துவங்கினர். மஞ்சள் சீசன் துவங்கியதும், மூட்டை, 13 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது. ஆனால், சில வாரங்களிலேயே, 10 ஆயிரம் ரூபாய்க்கு குறைந்தது. ஆன்லைன் மார்க்கெட்டை ஒட்டியே, வியாபாரிகள் மஞ்சளுக்கு விலை குறிக்கின்றனர். புதன்கிழமை, கமாடிட்டி ஆன்லைன் வர்த்தகத்தில், மஞ்சளுக்கு, 7,700 ரூபாய் வரை, மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது. ஆகஸ்ட் மாதம், 12 ஆம் தேதி வரை, மூட்டை, 8,000 ரூபாய்க்கு குறையாமல் இருந்த மஞ்சள், தற்போது, 7,500 ரூபாய் வரை, சென்று விட்டது. ஆன்லைன் வர்த்தகத்தில் இதே நிலை தொடர்ந்தால், மார்கெட்டிலும் மஞ்சள் விலை வீழ்ச்சியடையும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து, நாமக்கல் மாவட்ட மஞ்சள் விவசாயிகள் சங்க நிர்வாகியான வேல்முருகன் கூறியதாவது: ஆன்லைன் வர்த்தகத்தால், விவசாயிகள் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு மஞ்சளுக்கு அதிக விலை கிடைக்கும் என

எதிர்பார்த்த நிலையில், ஆன்லைன் வர்த்தகத்தால் மஞ்சள்விலை உயரவில்லை. இருப்பு வைத்திருக்கும் விவசாயிகள் கொஞ்சம், கொஞ்சமாக மஞ்சளை விற்று வருகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

இதுகுறித்து, மஞ்சள் வியாபாரிகள் கூறியதாவது: ஆன்லைனில் மஞ்சள் விலை தொடர்ந்து குறைந்து வருவதால், மார்க்கெட்டிலும் குறைய வாய்ப்புள்ளது. தமிழகத்தில், மஞ்சள் மார்க்கெட்டுக்கு பாதகமான சூழல் இல்லை. ஆயுத பூஜை, தீபாவளி சமயங்களில் மஞ்சள் விலை உயர வாய்ப்புள்ளது. ஆன்லைன் வர்த்தகத்தில், அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில், மஞ்சள் விலையில் ஏற்றம் இருந்தாலும், மூட்டை, 12 ஆயிரம் ரூபாயை தாண்டி விடும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## கல்லலில் விவசாய பணி தொடக்கம் 350 ஏக்கரில் நேரடி நெல் விதைப்பு

கல்லல், கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு, கல்லலில் பெய்த மழையை தொடர்ந்து, அப்பகுதியில் விவசாய பணி தொடங்கப்பட்டு உள்ளது. கல்லல் ஒன்றியத்தில் கடந்த ஆண்டு 8 ஆயிரம் எக்டேரில் நெல் விவசாய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆண்டு 8,700 ஏக்கர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. செவரக்கோட்டை, மானகிரி, மாலைகொண்டான் உள்ளிட்ட பகுதிகளில் 350 எக்டேரில் இயந்திர நேரடி நெல் விதைப்பு பணிகள் வேளாண் துறையால் தொடங்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாட்களில் பெய்த மழையை தொடர்ந்து சாத்தம்பத்தி, சன்னவனம், விசாலயன்கோட்டை, எழுமாப்பட்டி, ஆலங்குடி, எஸ்.ஆர்.பட்டணம், குருந்தம்பட்டு உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் விதைப்பு பணியை மேற்கொண்டுள்ளனர்.

கருப்பையா, சாத்தம்பத்தி: கடந்த மாதம் பெய்த மழையை வைத்து, உழவு மூலம் மண்ணை செம்மை படுத்தினோம். மழை பெய்தால் விதைக்கலாம் என்றிருந்த நிலையில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு ஓரளவு மழை பெய்தது. நிலத்தில் ஈரப்பதம் ஏற்பட்டது.

ஆனால், கண்மாய்களில் தண்ணீர் இல்லை. இருந்தாலும் கண்மாய் நீரை

நம்பித்தான் விவசாய பணிகளை தொடங்கியுள்ளோம். தொடர்ந்து மழை வரும் என்ற எதிர்பார்ப்பில் உள்ளோம். டிராக்டர் உழவு தான் மேற்கொள்ளப்படுகிறது. ஒரு மணி நேரத்துக்கு ரூ.600 வரை செலவாகிறது. கடந்த ஆண்டு ஓரளவு விளைச்சல் கிடைத்தது. இந்த ஆண்டும் அதே விளைச்சலை எதிர்பார்க்கிறோம். ஒருஎக்டேர் வரை இருந்தால் மட்டுமே மானியத்தில் விதை, மருந்து வழங்கப்படுகிறது. சிறிய அளவில் விவசாயம் செய்பவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. சிறிய விவசாயிகளுக்கும் நிலத்திற்கு தகுந்தாற்போல் இடு பொருட்கள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

### காய்கறி சாகுபடி கருத்தரங்கு

சிங்கம்புணரி எஸ்.புதுாரில் தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை சார்பில் மாவட்ட அளவிலான காய்கறிகள் சாகுபடி கருத்தரங்கு நடந்தது. ஒன்றிய தலைவர் ராஜமாணிக்கம் தலைமை வகித்தார்.துணை தலைவர் ராதாகிருஷ்ணன், சிவகங்கை வேளாண் வணிகத்துறை துணை இயக்குநர் சேகர், குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் செந்தில்குமரன், மண்டல கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் விஸ்வநாதன், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சுதர்சன் முன்னிலை வகித்தனர். தோட்டக்கலை உதவி இயக்குநர் அழகுமலை வரவேற்றார். தேசிய தோட்டக்கலை இயக்கத்திட்டம் மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கப்பட்டது. பேராசிரியர்கள் செல்வராஜ், விமலேந்திரன், செந்துார்குமரன் பேசினர். தோட்டக்கலை அலுவலர் ரேகா திருப்பதி நன்றி கூறினார்.

### ஏரியூரில் மஞ்சள் பயிர் பாதுகாப்பு கருத்தரங்கம்

பென்னாகரம்: தமிழக விவசாயிகள் சங்கம், மஞ்சள் விவசாயிகள் சங்கம் இணைந்து நடத்திய, மஞ்சள் பயிர் பாதுகாப்பு கருத்தரங்கம், ஏரியூரில் நேற்று நடந்தது. ஏரியூர் தனியார் திருமண மண்டபத்தில் நடந்த கருத்தரங்குக்கு, தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் சின்னசாமி தலைமை வகித்தார். கருத்தரங்கில் மஞ்சளில் இருந்து கேன்சர் நோய் தீர்க்க எடுக்கப்படும் குர்குமின் என்ற பொருளை, சிலர் செயற்கையாக தயாரிப்பதாகவும், இதனால் அதை பயன்படுத்தும்

நோயாளிகள் பாதிக்கப்படுவர் என்பதால், செயற்கை குர்குமின் தயாரிப்பதை, மத்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என, வலியுறுத்தப்பட்டது. மஞ்சள் விவசாயிகள் சங்க தலைவர் அருள் உட்பட பலர் பங்கேற்றனர்.

## வெங்காயம் இலவசம்: தமிழகத்தில் அல்ல ம..பி.,யில்



போபால்: மக்களுக்கு வெங்காயத்தை இலவசமாக வழங்க மத்திய பிரதேச மாநில அரசு முடிவு செய்துள்ளது. வெங்காயம் அழுகி போவதை தடுக்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மத்திய பிரதேச மாநிலத்தில் இந்த வருடம் மே மாதம் அதிகளவிலான வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டது. இதனால் இதன் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. இது விவசாயிகள் மத்தியில் கடுமையாக அதிருப்தியை ஏற்படுத்தியது. இதனையடுத்து விவசாயிகளிடமிருந்து வெங்காயத்தை கிலோவுக்கு ரூ.6 என்றளவில் கொள்முதல் செய்யப்படும் என முதல்வர் சிவ்ராஜ் சிங் சவுகான் அறிவித்தார். இதன்படி விவசாயிகளிடமிருந்து 10.4 லட்சம் குவிண்டால் வெங்காயம் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், பருவமழை காலம் துவங்கிய நிலையில், உரிய சேமிப்பு கிடங்குகள் இல்லாததால், வெங்காயங்கள் அழுக துவங்கின. இதனையடுத்து கொள்முதல் செய்யப்பட்ட வெங்காயத்தை விற்பனை செய்ய மாநில அரசு விற்க எண்ணியது. ஆனால், மிகக்குறைந்த விலை வெங்காயத்தை வாங்குபவர்கள் நிர்ணயம் செய்தனர்.

இந்நிலையில், வெங்காயத்தை இலவசமாக விநியோகம் செய்ய மத்திய பிரதேச மாநில அரசு முடிவு செய்துள்ளது. வெங்காயத்தை கொண்டு செல்வதற்கான

செல்வுக்காக கிலோவுக்கு ரூ.1 வசூலிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அரசு கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ள ரூ.3.28 லட்சம் குவின்டால் வெங்காயம் இலவசமாக வழங்கப்படும். இதனால் அரசுக்கு ரூ.100 கோடி இழப்பு ஏற்படும்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 12 ஆண்டுக்கு ஒருமுறை பூக்கும் நீலக்குறிஞ்சி அழகை ரசிக்க குவியும் சுற்றுலாப்பயணிகள்




கூடலூர் : பனிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் நீலக்குறிஞ்சி மலர்களை காணவும், இயற்கை அழகைக் கண்டு ரசிக்கவும் குமுளி அருகே சுற்றுலாப்பயணிகள் குவியத்தொடங்கி உள்ளனர். கேரள மாநிலம், இடுக்கி மாவட்டம் பீர்மேடு தாலுகாவிலுள்ள சுற்றுலாத்தலம் பருந்தும்பாறை. கடல் மட்டத்திலிருந்து சுமார் ஐந்தாயிரம் அடி உயரத்தில் உள்ள இங்கு மகாகவி ரவீந்திரநாத் தாகூரின் தலைப்பகுதியை போன்ற அமைப்பு கொண்ட, 'தாகூர்

பாறை’ என அழைக்கப்படும் இயற்கை எழில் கொஞ்சும் மலையும் உள்ளது.

இம்மலைப்பிரதேசத்தில் தற்போது நீலக்குறிஞ்சி அதிகளவு பூத்துள்ளது. இந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியான நீலகிரி, கொடைக்கானல், இடுக்கி மாவட்டம் மூணாறு பகுதியில் பூக்கும் நீலக்குறிஞ்சி பூக்கள், பருந்தும்பாறை பகுதியில் 12 ஆண்டுகளுக்கு பிறகு பூத்துள்ளது. டிசம்பர் வரை இம்மலர்களை இங்கு காணமுடியும் என்பதால் இப்பகுதிக்கு சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

## காவிரியில் நீர்வரத்து அதிகரிப்பு



மேட்டூர் : கர்நாடகாவின் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் தொடர்மழையால், அங்குள்ள கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதையடுத்து, உபரிநீர் காவிரியாற்றில் வெளியேற்றப்படுகிறது. இதனால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி அணைக்கு விநாடிக்கு 9,239 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 500 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. திறப்பை காட்டிலும் நீர்வரத்து அதிகமாக இருப்பதால், நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது. நேற்று முனதினம் 68.10 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று காலை 68.98 அடியாக உயர்ந்தது. அணையில் நீர் இருப்பு 31.83 டிஎம்சியாக உள்ளது. அதே சமயம், ஒகேனக்கல்லில் நேற்று முன்தினம் வினாடிக்கு 9 ஆயிரம் கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை நிலவரப்படி 9,600 கனஅடியாக அதிகரித்துள்ளது.

## வத்தலக்குண்டு விவசாயிகளுக்கு தென்னை வளர்ப்பு பயிற்சி முகாம்

வத்தலக்குண்டு, : வத்தலக்குண்டுவில் தென்னை வளர்ச்சி வாரியம் மற்றும் திண்டுக்கல் தென்னை உற்பத்தியாளர்கள் கம்பெனி சார்பாக வத்தலக்குண்டுவில் விவசாயி மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு தென்னை மரம் வளர்ப்பு மற்றும் ஏறும் பயிற்சி முகாம் நடந்தது.முகாம் துவக்க விழாவுக்கு தென்னை உற்பத்தியாளர் கம்பெனி சேர்மன் முருகேசன் தலைமை வகித்து பேசினார். அவர் பேசுகையில், ‘பயிற்சியில் பங்கு பெறுபவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது. பயிற்சி முடிவில் தென்னை மரம் ஏறும் மிஷின் இலவசமாக பயிற்சி பெற்றவர்களுக்கு வழங்கப்படும். ஆறு நாள் நடைபெறும் பயிற்சியில் தினசரி உணவு வழங்கப்படுகிறது. முதல் கட்டமாக பயிற்சி 40 பேருக்கும், அதைத் தொடர்ந்து மேலும் 5 கட்டமாக 200 பேருக்கும் பயிற்சி வழங்கப்படும்’ என்றார். முகாமில் கம்பெனி இயக்குனர்கள் சீனிவாசன், லிங்கையன், தேனிலா, முகமதுஅலி, செல்வராஜ், பெருமாள், காசி உள்பட பலர் கலந்து கொண்டனர். முகாமில் விவசாயி மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு தென்னை மரம் ஏறும் பயிற்சி வழங்கப்பட்டது. இயக்குனர் ஜெயவீரபாணடியன் நன்றி கூறினார்.